

# புனித லூர்து மாதா தேவாலயம்




45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

**மறைத்திரு திருத்தொண்டர் சந்தனசாமி பீட்டர்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org


**திருத்தந்தையின் கருத்து :** பொதுநிலையினரின் பணி: பொதுநிலையினர் உலகம் இன்று எதிர்நோக்கும் சவால்களுக்கு படைப்பாற்றலுடன் பதிலளிப்பதினால் தங்களின் குறிப்பிட்ட பணியை நிறைவு செய்ய வேண்டுமென்று

**மே மாத கரு :** கிறிஸ்துவில் வல்லமை கொண்ட குடும்பம்

## பங்கில் திருப்பலிகள்

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| மே 6 ஞா | காலை 9.00<br>காலை 10.00 | திருப்பலி (ஆ, ம)<br>நவநாள்/ திருப்பலி (த) | உயிர்ப்பின் 6ஆம் ஞாயிறு<br>புனித செபஸ்தியார் சிற்றாலய திருவிழா |
| மே 7 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | உயிர்ப்பின் வாரநாள் |
| மே 8 செவ் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | உயிர்ப்பின் வாரநாள் |
| மே 10 வியா | காலை 6.30<br>மாலை 8.00 | திருப்பலி (ஆ)<br>திருப்பலி (ஆ, த) | ஆண்டவரின் விண்ணேற்றம்<br>ஆண்டவரின் விண்ணேற்றம் |
| மே 11 வெள் | காலை 6.30 | திருப்பலி (த) | உயிர்ப்பின் வாரநாள் |
| மே 12 சனி | காலை 6.30<br>மாலை 4.30 | திருப்பலி (ஆ)<br>திருமணம் (த) | புனிதர்கள் நேரியுஸ் அச்சிலியுஸ் & பங்கராஸ்<br>ஷெனன் ராஜ் டேனியல் தனுவார் & எஞ்சலீனா சின்னப்பன் |
| மே 13 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>மாலை 6.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம)<br>புகழாராதனை/ திருப்பலி (த) | உயிர்ப்பின் 7ஆம் ஞாயிறு<br>உயிர்ப்பின் 7ஆம் ஞாயிறு<br>புனித பிரான்சிஸ் அசிசி சிற்றாலயம், தாசேக் |

## பங்கு நடவடிக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| மே 6 ஞா | மாலை 5.30 | பெர். மை 1-1 | RCIA வேட்பாளர்கள் - ஒன்றுகூடுதல் |
| மே 7 திங் | மாலை 8.00<br>மாலை 8.00 | பெர். மை 1-1<br>பெர். மை 1-3 | கிறிஸ்து அரசர் சிற்றாலய கட்டிட குழு கூட்டம்<br>புலூமா மகளிர் குழு கூட்டம் |
| மே 8 செவ் | காலை 8.30<br>மாலை 8.00 | பெர். மை 1-3<br>பெர். மையம் | பங்கு பரிந்துரை குழு<br>பங்கு தலைவர்கள் உருவாக்கம் (அதிச & பணிக்குழு) |
| மே 11 ~ 19 | இரவு 8.00 - 9.00 | புலூமாதே | பெந்தெகொஸ்த் நவநாள் |
| மே 12 சனி | காலை 9.00 | பெர். மையம் | ஒருங்கிணைந்த இறையியல் கல்வி சான்றிதழ் 2 |
| மே 13 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>மதியம் 12.00 | பெர். மையம்<br>பெர். மையம்<br>ஆலயம் | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு (த) |
| 6 மே 2018 மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது. மீண்டும் 13 மே 2018 வகுப்புகள் வழக்கம் போல் நடைபெறும். | | | |

**2018 மே & ஜூன் மாத திருமணங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| மே 18 | மாலை | 4.30 | சடங்கு (த) | சிவா லிங்கம் த/பெ ராமசந்திரன் & செலினா ஏன் த/பெ S. மோசஸ் |
| மே 26 | மதியம் | 2.00 | திருமணம் (த) | அலெக்ஸ் த/பெ ஆரோக்கியசாமி & நான்சி பெர்னிஸ் த/பெ சந்தனசாமி |
| மே 26 | மாலை | 4.30 | திருமணம் (ஆ) | பிடலிஸ் மோசஸ் ஹோசே & மெத்தில்டா ஹோ ஃபுங் என் |
| ஜூன் 1 | மாலை | 4.00 | சடங்கு (த) | பீட்டர் அந்தோணி த/பெ மைக்கல் & நலினி த/பெ தேவராஜூ |
| ஜூன் 2 | காலை | 11.00 | திருமணம் (ஆ) | நோவெல் ராய் த/பெ லூயிஸ் & பேர்லிஷா த/பெ தேவநேசம் சிம்சன் |
| ஜூன் 2 | மாலை | 4.00 | திருமணம் (த) | செல்வா பிரான்சிஸ் த/பெ இன்னாசி & கிறிஸ்டினா த/பெ ஜெரால்டு சில்வெஸ்டர் |

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. பரிசுத்த ஆவி நவநாள் புகழாராதனையும், பகிர்வும்:** கருத்து: "ஒரு புதிய பெந்தெகொஸ்த்: நம்பிக்கையின் மறைப்பணி சீடர்களாக மாறுதல். நாள்: 11 மே – 19 மே 2018 (வெள்-சனி) நேரம்: இரவு 8.00-9.00 வரை இடம்: பெர். மையம் (தமிழ்)& ஆலயம் (ஆங்கிலம்)

**2. மூத்தோர் பணிக்குழு:** அடுத்த ஒன்றுகூடுதல் 15 மே 2018 (செவ்) காலை 9.30க்கு பெர். மையத்தில் திருப்பலியுடன் தொடங்கும். 60 வயதுக்கு மேற்பட்ட பங்கு மக்கள் கலந்துக்கொள்ள விருப்பமுள்ளவர்கள் பெயர்களை பங்கு அலுவலகத்தில் 13/5/18 (ஞாயிறு) முன்பாக பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். தொலைபேசி வழியாகவும் பெயர்களை பதிவு செய்யலாம்.

**3. நன்றி:** கம்போங் சீமி குடும்ப தின உணவு சந்தை குழு, அனைத்து பங்கு மக்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறது. ஒரு வெற்றிகரமான உணவு சந்தையாக அமைய உதவிய உங்களின் ஆதரவிற்கும், அன்பிற்கும், தாராள குணத்திற்கும் மனமார்ந்த நன்றி!.

**4. புத்தக விற்பனை:** தந்தை இக்னேசியஸ் குவான் அவர்கள் "நாங்கள் நினைவில் கொள்கிறோம், நாங்கள் கொண்டாடுகிறோம், நாங்கள் நம்புகிறோம்" என்ற திருப்பலி புத்தகம் விற்பனையில் உள்ளது. ஒரு புத்தகம் ரிம 65/- இதனை நீங்கள் பங்கு அலுவலகத்தில் வாங்கிக்கொள்ளலாம். குறைந்த நகல்கள் மட்டுமே உள்ளன.

**5. நேர்மையுடன் வாக்களிக்கவும்:** வாக்களிப்பது நமது கடமையாகும். தயவு செய்து பகுத்தறிந்து உங்களது சரியான வாக்களிப்பை செய்யவும்.

**6. ஆலயம் கட்சி கூடம் அல்ல:** ஆலய வளாகத்திற்குள் பிரச்சாரம் செய்வதும், அல்லது எந்த அரசியல் உபகரணங்களையும் விநியோகம் செய்வதும் அனுமதிக்கப்படாது.

**7. விவிலிய அறிவு (SPM) ஆசிரியர்களுக்கான உருவாக்கம்: 11, 12, & 13 மே 2018 (வெள் ~ ஞாயிறு)** @ பெர். மை. உணவு வழங்கப்படும்.

**8. PDYD4 - க்காக வாகனம் கழுவுதல்: நாள்**: 13 மே 2018 (ஞாயிறு) **நேரம்**: காலை 7.00 ~ மதியம் 12.00 வரை. **இடம்**: பங்கு வளாகம். கூப்பன்கள் திருப்பலிகளுக்கு பிறகு விற்கப்படும். கிடைக்கக்கூடிய பணம் PDYD4 க்கு செல்லக்கூடிய மாணவர்களுக்கு உதவியாக இருக்கும்.

**9. கண்கவரும் இரவு 2018: கருத்து:** ஈப்போ, புலூமா திருமணமான தம்பதிகளுக்கு கண்கவரும் இரவு 2018 **இடம்**: Heritage Hotel (4* விடுதி) - Cameron Highland. **பதிவு:** 11/8/18 (சனி) **வெளியேறும் நேரம்**: 12/8/18 (ஞாயிறு) **கட்டணம்:** ரிம 350/- ஒரு தம்பதிக்கு (போக்குவரத்து, 4* விடுதி & 4 உணவு உள்பட) **சிறப்பம்சங்கள்**: திருமண வாக்குறுதியை புதுப்பித்தல் & காதல் காவியம் சார்ந்த மெழுகுவர்த்தி ஒளியுடன் கூடிய இரவு உணவு. புலூமாதே குடும்ப வாழ்வு பணிக்குழு தம்பதிகளுக்காக ஏற்பாடு செய்யப்படும் முதல் சுற்றுலா. **தொடர்புக்கு**: தோமஸ் சாந்த குமார் (016-5260218)/ ஞானமுத்து (016-5608827). பதிவுகள் 29/4/18 ~ 27/5/18 வரை ஞாயிறு திருப்பலிகளுக்கு பிறகு நடைபெறும் அல்லது பங்கு அலுவலகத்திலும் பதிவு செய்யலாம்.

**10. பங்கு சந்தா**: ஆலயத்திற்கும், கடவுளின் தூதுரைப் பணிக்கும், பங்கு பராமரிப்புக்காவும் அர்ப்பணிக்க குறிப்பிட்ட தொகையை செலுத்த வேண்டும் என்பதை நாம் அறிவோம். பழைய ஏற்பாட்டில் பத்திலொரு பாகம் செலுத்துவது பற்றி நாம் கேட்டிருக்கிறோம். இது நன்றாகவே தெரியும்!!!! இந்த பங்கில், 2017ல் 1281 சந்தாதாரர்களில் 705 சந்தாதாரர்கள் மட்டுமே செலுத்தியுள்ளனர்- 55.04% மட்டுமே. நாங்கள் 10 விழுக்காடு கேட்கவில்லை! வேலை செய்யும் ஒவ்வொருவரும் ஒரு மாதத்திற்கு ரிம 10/- ஐ செலுத்த கேட்கிறோம். ஒரு McD Big Mac விலைக்கு கூட தேறாது! இதைப்பற்றி சிந்தியுங்கள்.

**11. ஆரம்ப பள்ளி ஆசிரியர்கள் தேவை:** கல்வியில் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு கூடுதல் வகுப்புகளை ஏற்பாடு செய்ய பங்கு திட்டமிட்டுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் பெயர்களை பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும்.

**12. வடக்கு திசை அதிச-வின் காலை சிற்றுண்டி:** வடக்கு திசை அதிச 13 மே 2018 (ஞாயிறு) காலை 7.00 & 9.00 மணி திருப்பலிகளுக்கு பிறகு விற்பனை செய்யவுள்ளனர். கிடைக்கக்கூடிய பணம் அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதிக்கு சேரும். மதிய உணவு பொட்டலங்களாகவும் விற்கப்படும். தயவு செய்து உங்களது ஆதரவை தாருங்கள்.

**13. திருத்தொண்டர்கள் லூயிஸ் லோ, ஜேம்ஸ் பிச்சை & லியோ எலியஸ் குருவானவர்களாக திருநிலைப்படுத்தப்படுதல் நேரலை: 29 மே 2018 (செவ்),** புக்கிட் மெர்தாஜாம், புனித அன்னம்மாள் ஆலயத்தில் காலை 10.00க்கு நேரலை செய்யப்படும். பினாங்கு ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் தலைமையில் நடைபெறும் கொண்டாட்டத்தை இணையத்தில் http://www.youtube.com/user/liveonlinepenang வழி காணலாம்.

**14. பங்கின் உத்தரவு: மறைக்கல்வி வகுப்புகள்**: புது நன்மை எடுத்த பிறகு அனைத்து குழந்தைகளும் பின்வரும் பணிக்குழுக்களில் ஏதேனும் ஒன்றை கண்டிப்பாக தேர்ந்தெடுக்க வேண்டும். அ) **பீடச்சிறுவர்கள்** (சிறுவர்கள்/ சிறுமியர்கள்) ஆ) **ஆங்கில பாடல்குழு** இ) **தமிழ் பாடல்குழு**. இது கட்டாயமானதாகும்.

**15. புனித கிரகோரி பாடல்குழு (த):** புனித கிரகோரி பாடல்குழு தமிழ் திருப்பலிகளில் ஆண்டவருக்கு பணி செய்ய திறமையாக பாடுபவர்களையும் இசை கருவிகளை (Organ, Tabla, Triple Bongo) வாசிப்பவர்களையும் வரவேற்கிறது. தயவு செய்து உங்களது பெயர்களை திருத்தொண்டர் சந்தனசாமி அல்லது பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யலாம்.

**16. அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (ஆங்கிலம்):** 19 மே 2018 (சனி) @ மாலை 4.30க்கு நடைபெறும். மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**17. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி ஏப்ரல் 2018 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **394,710.41** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **428,558.39** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**29/04/18 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - RM 844.60 **காலை 9.00** - RM 1,424.90 **மொத்தம்** - RM 2,269.50 **2018** - RM 665.00

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்